அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
New No.46,Old,No.4,Ramakrishna Street,
(North Usman Road)T.Nagar,Chennai-6000117.
044-28143306 / 28143307 / Fax 42124624
www.aismk.in



அ.எண்.200/2015
தேதி.23.08.2015

# அ.இ.அ.தி.மு.க தொண்டர்களுக்கு வேண்டுகோள்! மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. ச.ம.க. நிறுவனர் – தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை.

அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்பவர்களின் நடவடிக்கைகள், பேச்சுக்கள், எழுத்துக்கள் மற்றவர்களுக்கும் மக்களுக்கும் எடுத்துக்காட்டாய், வழிகாட்டுதலாய், உதாரணமாய் திகழவேண்டும். அந்த நெறியிலிருந்து மாறி ஈ.வி.கே.எஸ் இளங்கோவனின் கண்டனத்திற்குரிய பேச்சு அமைந்துவிட்டது. இருப்பினும் பெருந்தன்மையான உள்ளத்தோடு அ.இ.அ.தி.மு.க தொண்டர்கள், ஈ.வி.கே.எஸ் இளங்கோவனுக்கு எதிராக நடத்தி வரும் போராட்டங்களை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது வரவேற்கத்தக்கது.

இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மன்னிக்கும் குணத்தையும், பெருந்தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. இதை உணர்ந்து ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வருத்தம் தெரிவிக்க வேண்டும்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.